பக்கங்கள் : ஆறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 20 வியாழக்கிழமை (03.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 157

# சு.கவின் தீர்வு யோசனை குறித்து புதுடில்லியின் பிரதிபலிப்பு விரைவில்!

## அதிருப்தி தெரிவிக்கும் கருத்து பெரும்பாலும் நாளை வரும்

கொழும்பு, மே 3

**இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக ஆளும் அரசுக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்திருக்கும் யோசனை குறித்து புதுடில்லிபெரும் அதிருப்தி கொண்டிருப்பதாக அறியவருகிறது. அது தொடர்பான தனது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் கருத்தை இந்திய அரசு பெரும்பாலும் நாளை பகிரங்கப்படுத்தும் என விடயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.**

இலங்கையில் ஆளும் கூட்டமைப்பின் பிரதான கட்சி ஸ்ரீல.சு.கவே. அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இயங்கும் கட்சி அது.

எனவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அக்கட்சி முன்வைக்கும் யோசனை ஆளும் தரப்பின் உயர்மட்டத்தின் கருத்து நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவே இந்தியா உட்பட சர்வதேச சமூகம் கருதுகின்றது.

அத்தகைய நிலையில், ஆளும் தரப்பின் யோசனைத்திட்டம், சிறிதேனும் விட்டுக் கொடுப்புடன் கூடியதாக இல்லாமல், இறுக்கமானதாகவும், ஈழத்தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்வதற்கு நெருங்கிக்கூட வராததாகவும் அமைந்திருப்பது சர்வதேச சமூகத்தைப் பெரும் ஏமாற்றத்துக்குள்ளும், எரிச்சலுக்குள்ளும், அதிர்ச்சிக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஈழத்தமிழர்களுக்கு நியாயமானதைப் பகிர்ந்தளிக்க கொழும்பு முன்வந்தால் மட்டுமே புலிகளின் தீவிரவாதத்தையும் பிரிவினைவாதப் பிடிவாதப்போக்கையும் ஓரங்காட்டி ஒதுக்கலாம் என்று கருதும் புதுடில்லி, இது விடயத்தில் விட்டுக் கொடாத இறுக்கமான போக்கை மஹிந்தரின் கட்சியும் அரசுத் தரப்பினரும் வெளிப்படுத்தி வருகின்றமை மறுபுறத்தில் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கைப் போராட்டத்தை நியாயப்படுத்தி நிற்பதாகக் கருதுகின்றது.

**தோல்வி கண்ட மாவட்ட அபிவிருத்திச்சபை**

அத்தோடு , 25ஆண்டுகளுக்கு முன்னர், 1981 - 1982 காலப்பகுதியில், ஈழத்தமிழர்களின் விருப்புக்குமாறாக நடைமுறைப் படுத்தப்பட்டு, முழு அளவில் தோல்விகண்ட மாவட்ட அபிவிருத்தி சபைத் திட்டத்தையே, மாவட்ட மட்ட அதிகாரப்பகிர்வு மற்றும் கிராம ராஜ்யம் என்ற பெயர்களோடு தீர்வாக மீண்டும் முன்வைப்பதற்கு ராஜபக்ஷ அரசு இணங்குகின்றது என இந்த யோசனைத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியா எடைபோடுகின்றது.

அதையும் தாண்டி மாகாணசபை அடிப்படையிலான தீர்வு யோசனை இந்தியத் தலையீட்டுடன், இலங்கை - இந்திய ஒப்

(06 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இருதரப்புகளுடனும் பேச பிரிட்டன் தயார்!

## நாடாளுமன்றத்தில் நேற்று விவாதம்

லண்டன்,மே 3

**இலங்கையின் நிலைவரம் தொடர்பாக - இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுவது குறித்து - பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதம் ஒன்று இடம்பெற்றது.**

**பிரிட்டனின் ஆளும் தொழிற்கட்சி, கன்ஸர்வேட்டிவ் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் ஆர்வத்துடன் பங்கேற்று உரையாற்றியிருக்கின்றனர்.**

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இரண்டு தரப்புகளுக்கும் இடையே ஒரு சமமான அணுகுமுறையை கைக்கொண்டிருப்பது போன்ற தோற்றத்தை வெளிக்காட்ட விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டிய தேவை இருக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வலியுறுத்திய போதிலும் அதற்கு பிரிட்டன் அரசு மறுத்துவிட்டது.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து மனித உரிமைமீறல்கள் இடம்பெறுகின்றமைக்கு இலங்கை அரசு மீதும் பிரிட்டன் நாடாளுமன்றம் வன்மையான அதிருப்தியை வெளியிட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சர் இந்த விவாதத்தில் உரையாற்றும்போது இலங்கைப் பிரச்சினை தொடர்பான தமது அரசின் நிலைப்பாட்டை தெளிவு படுத்தினார்.

''இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இலங்கையிலேயே விடுதலைப் புலிகளை சந்திக்க பிரிட்டிஷ் அரசு தயாராக இருக்கிறது. பிரிட்டிஷ் அரசு இந்த (06 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் துணைத் தூதுவரின் கிளிநொச்சி விஜயம் ஒத்திவைப்பு

### பாதுகாப்புக் காரணம் நிமித்தமாகவா?

கொழும்பு,மே 3

இலங்கைக்கான பிரிட்டிஷ் துணைத் தூதர் லெஸ்லி கிரேக் இன்று கிளிநொச்சிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

துணைத் தூதர் இன்று கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர்சு.ப.தமிழ்ச்செல்வன்தலைமையிலான குழுவினரைச் (06ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன 12 தமிழக மீனவர்களும் இலங்கையில் பாதுகாப்பாக உள்ளனர்

### தமிழக பொலிஸ் மா அதிபர் நேற்று தகவல்

சென்னை, மே 3

கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதி தொடக்கம் காணாமற்போயிருந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்களும் இலங்கையில் பாதுகாப்பாக இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

தமிழக பிரதிப் பொலிஸ் மா அதிபர் (டி.ஜி.பி.) டி.முகர்ஜி நேற்று இதனைத் தெரிவித்தார்.

காணாமற்போன மீனவர்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டிருக்கக் கூடும் என்று முன்னர் தமிழகத்தில் பரவலாக சந்தேகம் கிளப்பப்பட்டிருந்தது. அதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் டி.ஜி.பி. முகர்ஜி அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார். இந்த விடயம் தமிழக சட்ட சபையில் எழுப்பப்பட்டு முதல்வர் கருணாநிதி பதிலும் அளித்திருந்தார்.

மீனவர் கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டை மறுத்து விடுதலைப் புலிகளின் தலைமை அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக தமிழகத் தலைவர்களும் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் தமிழக பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.முகர்ஜி மீனவர் தொடர்பாக மீண்டும் நேற்றுத் தகவல் வெளியிட்டுள்ளார்.

காணாமற்போன 12 மீனவர்களும் இலங்கையில் பத்திரமாக இருப்பதாக அந்நாட்டு மீனவர்கள்மூலம் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவர்களை விரைவில் மீட்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது - என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-1)

## வவுனியாவில் இருவர் ஆயுதபாணிகளால் கொலை

வவுனியா,மே 3

வவுனியாவில் வெவ்வேறு இடங்களில் நேற்றும் நேற்றுமுன்தினமும் இருவர் அடையாளம் தெரியாதோரினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இரட்ணசிங்கம் சுதாகரன் (வயது 33) என்பவர் வவுனியா குருமன்காடு பகுதியில் வைத்து நேற்று காலை சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## 14 ஈழ அகதிகள் மன்னார் திரும்பினர்

மன்னார், மே 3

தமிழகத்திலுள்ள மண்டபம் அகதிகள் முகாமிலிருந்து இலங்கையைச் சேர்ந்த பதின் நான்கு பேர் தலைமன்னார் கடற்பரப்பினூடாக மன்னாரை வந்தடைந்திருக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை 6 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு குழந்தை உட்பட 14 பேர் சட்ட விரோதமாகப் படகுமூலம் புறப்பட்டு வந்துள்ளனர். கடலில் உள்ள மணல் திட்டு ஒன்றில் படகோட்டிகளால் இறக்கி விடப்பட்டிருந்தனர்.

இவ்வாறு மணல் திட்டில் இறக்கி விடப்பட்டவர்களை கடல் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 8 மணியளவில் ஒப்படைத்தனர். (06 ஆம் பக்கம் பார்க்க)




ஜேர்மனியில் நேற்று புலம்பெயர்ந்தோர் நடத்திய மேதின ஊர்வலத்தின் போது உதயன் பத்திரிகைக்கு எதிரான கொடூரத்தை பிரதிபலிக்கும் பதாகை ஏந்திச் செல்லும் காட்சி.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 85 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(Rtd.S.P.H.I.)



தாயன்பை நாம் இழந்து தரணியிலே
- தவித்த போது
தாயாக எமை வளர்த்த தன்னிகரில்லாதத்
- தந்தையே !
ஏணியாய் இருந்து எம் வாழ்வினைச் சிறப்பித்த
ஏந்தலே இன்று உமக்கு எண்பத்தைந்து
- வயதையா !

எம் தாயின் ஆசிதனை
எம் பெருமான் அருளதனை
நோயின்றி நீங்கள் வாழ
நெஞ்சுருகி வேண்டுகின்றோம் !

(60231) குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி: "திலக வாசம்"
தபாலக வீதி, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி: இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

## காளுவன் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்டது

சுழிபுரம்,மே 3

சுழிபுரம், காளுவன் பகுதியிலுள்ள காணிகளில் இருந்து மிதிவெடிகள் யாவும் அகற்றப் பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து வருட காலமாக மிதிவெடிகள் நிறைந்த இடமாக இப் பகுதி இருந்ததால் மக்கள் நடமாட அச்சம் கொண்டிருந்தனர். தற்சமயம் மிதி வெடிகள் அகற்றப்பட்டதால் மக்கள் அப் பகுதியூடாக செல்கின்றனர். (203-28)



# MAHARAJ TOURS

## VAN FOR HIRE



தற்போது உள்ளூர் சேவைகளுக்கான கட்டணம் Km

01) 60 Km இற்கு குறைவாயின் (<60Km)
1 Km = 30/- அத்துடன் 1 நாள் கட்டணமாக Rs.300.00 அறிவிடப்படும்

02) 60 Km இற்கு கூட (>60 Km) 1 Km = Rs. 30
ஒரு நாள் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

03) காப்புறுதி செய்யப்பட்டது (11 பயணிகள் உட்பட) Full Insurance

உடன் அழையுங்கள்:
0775 114805, 222 6659


# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## தர்மபாலன் செல்வமலர்



தோற்றம்
1947★05★31

மறைவு
2007★03★20

அன்பூட்டி அறிவூட்டி அரவணைத்த எம்
அன்புத் தாயே!
நாற்பத்தைந்து நாள்கள் சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்

8/21, கற்குளம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

அன்பு மகள்,
மருமகன் (ஜீவன்).

(60233)

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

நிலா சனசமூக நிலையம் கட்டடநிதிக்காக நடத்திய அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு 30/04/2007 திங்கள் அன்று பரீட்சிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பரிசு பெற்ற இலக்கங்கள் வருமாறு:

முதலாவது பரிசுக்குரிய இலக்கம் - 1848
இரண்டாம் பரிசுக்குரிய இலக்கம் - 116
மூன்றாம் பரிசுக்குரிய இலக்கம் - 1548

ஆறுதல் பரிசுகள்:
1026,1489, 35, 1687, 1104, 1572, 1874, 203, 1006,780

*அதிர்ஷ்டசாலிகள் அதிர்ஷ்ட சீட்டுக்களுடன் 07.05.2007 திகதிக்கு முன்னர் எமது காரியாலயத்தில் பிற்பகல் 3 மணி முதல் 6மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.*

நிர்வாகம் நிலா சனசமூக நிலையம்
உடுவில் தெற்கு,
சத்தியபுரம். (60226)

## எமிரேட்ஸ் விமானசேவை நாளை ஆரம்பம்

எமிரேட்ஸ் விமானம் தனது இலங்கைக்கான விமான சேவையை மீண்டும் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளது.

வெள்ளிக்கிழமை அதிகாலை 3மணியளவில் டுபாய் நோக்கி எமிரேட்ஸ் விமானம் தனது முதற்சேவையை ஆரம்பிக்கவுள்ளது. அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில் டுபாயில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அந்த விமானம் திரும்பவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை புலிகள் கொழும்பில் நடத்திய விமானத் தாக்குதலுக்கு படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலின்போது அந்த வான் பரப்பில் பயணித்த எமிரேட்ஸ் பயணிகள் விமானம் தாக்குதலுக்கு இலக்காகும் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனம் தனது இலங்கைக்கான சேவையை இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


சகோதரஜே in ப்ரியமாய்.......

பாடற்பிரதிகளை நீங்கள் விஜெய் Recording Centre மற்றும் Music World இலும் பெற்றுக்கொள்ளலாம்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
#15,Sirambiyadi Lane, Jaffna.
Branch : #167,Kasthuriyar Rd, Jaffna.
Phone : 021 222 8250, 0777 222 422

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

80% off

வகுப்புக்கள்ஆரம்பம்:-
Batch I : 04/05/2007 Batch II : 05/05/2007
Batch III : 06/05/2007 BatchVI : 09/05/2007

Diploma in Computerized Accounting

Accpac + Quick books pro +MYOB

வகுப்புக்கள் ஆரம்பம்.
05/04/2007 , 06/04/2007, 07/04/2007


## அரசாங்க அதிபரின் அறிவித்தல்
## சீமெந்து விற்பனை விலை நிர்ணயம்

*யாழ்.மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள 50 Kg சகல தர உற்பத்திகளின் சிமெந்து பக்கற் ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை ரூபா 1200 எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.*

*எனவே மேற்படி சிமெந்தினை ரூபா 1200 மேல் விற்பனை செய்ய வேண்டாம் எனவும் விற்பனை செய்யப்படும் சிமெந்திற்கு பற்றுச் சீட்டுக் கொடுக்கப்படுவதுடன், விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் எனச் சகல வர்த்தகர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேற்கூறிய நிபந்தனைகளை மீறுவோர் மீது பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.*

[illegible]
அரச அதிபர், யாழ்.மாவட்டம்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 20 ★ 08 ★ 1970

அனைவரும் நெகிழ 03 ★ 05 ★ 2004



அமரர்

## தில்லைநாதன் கெங்காதரன்

(உரிமையாளர் - தரன் மரக்காலை, கொக்குவில்)

கெங்காதரன் என்ற மங்காத பெயர்
கொண்ட மாணிக்கமே!
ஆண்டுகள் மூன்று அருளாமற் போனதையா!
ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்தித் தவிக்கின்றோம்
வேண்டுமென்றோ நீரும் விண்ணுலகில் உறைகின்றீர்
விரைந்து வந்து எமது வேதனையைத் தீரும் ஐயா
கண்டு வருவீர் என்று எண்ணி இலவு காத்து கிளியானோம்
இன்னல்கள் நிறைந்து இருண்டதையா எம் வாழ்வு
நீண்ட பயணத்தை நிறுத்திவிட்டு வாரும் ஐயா
நெஞ்சம் கலங்குகின்றோம் நினைவு தடுமாறுகிறோம்

மில் லேன்,
மல்லாகம். (60234) - குடும்பத்தினர்.

# அந்தியேட்டி அழைப்பு

மலர்வு 01 ★ 03 ★ 1934



உதிர்வு 01 ★ 04 ★ 2007

## அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(இளைப்பாறிய ஆங்கில, உடற்கல்வி ஆசிரியர்)

*கடந்த 01.04.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (03.05.2007) வியாழக்கிழமை காலை மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

"விநாயகர் இல்லம்"
அல்வாய் தெற்கு, வதிரி. (60222) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையர்க்கரசி கந்தசாமி



காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் இல.764 கே.கே.எஸ். வீதி, தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி கந்தசாமி 30.04.2007 கொழும் பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் (இளைப்பாறிய பாடசாலை அதிபர்) - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும் பொன்னம்பலம் -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமியின் (இளைப்பாறிய வடக்கு-கிழக்கு நீர்பாசன பணிப்பாளர்) பாசமிகு மனைவியும் திருமகள், தவராசா, சிற்சபேசன், கிருஷ்ணஜெயந்தி, முரளீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நல்லைநாதன், குலதேவி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஜனகன், ஆரூரன், ஐங்கரன், லக்சிபிரதா ஆகியோரின் பேத்தியும் நித்தியானந்தம், பத்மாசனி, பாலசுப்பிரமணியம், சரோஜினி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அன்னமுத்து நமசிவாயம், பரமேஸ்வரி, ஆறுமுகம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2007) வியாழக்கிழமை பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு தகனக் கிரிகைகளுக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.764, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

பொ.ஆறுமுகம்,
சி.தில்லைநாதன் (சகலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்புற நடைபெற்றது. திருவிழாவில் தேர்ப் பவனி ஆலய முன்றிலில் ஆரம்பிக்கப்படுவதை முதல் இரு படங்களிலும் - பெண்கள் தேர்வடம் பிடித்து தேர் இழுக்கும் காட்சியை அடுத்துள்ள படத்திலும் - காணலாம. (படங்கள்: சுந்தா)

# நெடுந்தீவு-குறிகாட்டுவான் சேவைக்கு புதிய படகு; ரூ.90 லட்சம் ஒதுக்கியும் வேலை ஆரம்பமாகவில்லை

நல்லூர், மே 3

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான போக்குவரத்தில் ஈடுபட புதிய படகை அமைப்பதற்கென 90லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆயினும் ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் படகு கட்டும் பணி எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே கடந்த 40 வருடங்களுக்கு மேலாகக் குமுதினி படகு மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றது. அப்படகு அடிக்கடி பழுதடைந்து வருகின்றது.

இந்நிலையில் புதிய படகு கட்டுவதற்கென நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதியைப் பயன்படுத்தி படகுகட்டும் பணி எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மெத்தனப்போக்கு விசனம் அளிப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (202-111)

# சுதந்திரக் கட்சி யோசனைகள் எதிர்பார்க்கப்பட்டதுபோல் இல்லை

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கருத்து

கொழும்பு, மே 3

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினை தீர்வுக்கென வெளியிட்டுள்ள யோசனைகள் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு அமையவில்லையென தபால் தொலைத் தொடர்பு அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ஒருமனதுடன் ஹக்கீம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் நடந்த பேராளர் கூட்டத்திலும் அவரது தெரிவு அங்கீகரிக்கப்பட்டது.

பேராளர்கள் மத்தியில் அவர் பேசுகையில் செனட் சபையொன்றை நிறுவப்போவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது. இதன்மூலம் இந்த யோசனைகள் சமஷ்டி ஆட்சியைக் கொண்டுவருவதற்கானவை என்றவகையில் ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. உண்மையில் இந்த யோசனைகள் ஜே.வி.பி.யையும் ஹெலஉறுமயவையும் திருப்திப் படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டவை போல் தோன்றுகின்றன - என்றார். இந்த யோசனைகளை தமது கட்சி உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் ஆராயவிரும்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திக் கட்சியின் யோசனைகள் அரசாங்கத்தின் யோசனைகளாகக் கொள்ள முடியாது. அரசின் யோசனைகள் என்றால் சகல கட்சிகளையும் கலந்தாலோசித்து தீர்மானித்திருக்கவேண்டும் - என்றார் ரவூப் ஹக்கீம். (ப)

## இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மே 3

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் மாணவர்களுக்கான இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதமளவில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு பெற்ற அறநெறிப்பாடசாலைகள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-79)

# பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 03

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்து நடைபெறவுள்ள போட்டிகளின் விவரம் வருமாறு: மேசைப்பந்து - 8ஆம் திகதி - 19வயது ஆண், பெண் - யாழ். மத்தியகல்லூரி.

பூப்பந்து - 9ஆம் திகதி - 19 வயது ஆண் - யாழ். பல்கலைக்கழகம்.

பூப்பந்து - 10ஆம் திகதி - 19 வயது பெண் - யாழ். பல்கலைக்கழகம்

கரபந்து - 12, 13ஆம் திகதிகள் -15, 17,19, வயதுப்பிரிவு ஆண் - யாழ் முத்துத்தம்பி ம.வி.

கரபந்து - 14ஆம் திகதி - 15,17, 19 வயது பெண் -யாழ். முத்துத்தம்பி ம.வி.

வலைப்பந்து - 19, 20 ஆம் திகதிகள் -15,17, 14வயதுப் பெண் யாழ். முத்துத்தம்பி ம.வி.

சதுரங்கம் - 26, 27 ஆம் திகதிகள் - 15,19 வயது ஆண், பெண்- யாழ் இந்து மகளிர் கல்லூரி.

கிரிக்கெட் 28, 29ஆம் திகதிகள் - 19 வயது ஆண் - யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

தடகளப்போட்டி - ஜூன்6,7,8 ஆம் திகதிகளில் 11,13,15,17,19, 21 வயதுப்பிரிவு ஆண், பெண் - யாழ் பல்கலைக்கழகம்.

கூடைப்பந்தாட்டம் ஜூன்9,10ஆம் திகதிகள் -19வயது -ஆண், பெண் - யாழ். இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி.

உடற்பயிற்சி - ஜூன் 15ஆம் திகதி - 19 வயது ஆண், பெண் - யாழ் மத்திய கல்லூரி. (203)

## சுய தொழிலுக்கு நன்கொடை

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவை பெற்று வருபவர்களில் ஒன்பது பேருக்கு சுயதொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கு நன்கொடையாக தலா 10ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (135)

## மே மாத ஓய்வூதியம்

அரச ஓய்வூதியர்களின் மே மாத ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படும் என கொழும்பு ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது. (51)

# வெசாக் பண்டிகை பிரதேச ரீதியாக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 3

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் படையினரின் முகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் வெசாக் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

வடமராட்சியில் வல்வைச் சந்தி, பருத்தித்துறை பிரிகேட், மந்திகை ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாம்களிலும், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திலும் வெளிச்சக்கூடுகள், தோரணங்கள் போன்றவற்றால் அலங்கரித்தும், தேசியக்கொடி ஏற்றியும் வெசாக் பண்டிகை கெண்டாடப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டது. பொது மக்களுக்கு சிற்றுண்டிகளும் குளிர்ப்பானங்களும் வழங்கப்பட்டன.

வெளிச்சக்கூடுகள், மின் விளக்குகள் என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

சாவகச்சேரி பிரதேசத்தில் பல இராணுவ முகாம்களிலும் வெசாக் பண்டிகை கொண்டாடப் பட்டது.

# மாகாண அலகுகளுக்கேற்ப அரச அலுவலர்கள் பிரிப்பு

யாழ்ப்பாணம். மே 3

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனி அலகுகளாகப் பிரிக்கப்பட்டதை அடுத்து மாகாண அரசின் கீழ் பணியாற்றிய சகல அரச உத்தியோகத்தர்களும் வேறாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி நிதியமைச்சினால் வடக்கு, கிழக்கு மாகாணம் இரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன.

இதையடுத்து அரச சேவையில் கடமையாற்றும் சகல நிரந்தர உத்தியோகத்தர்களும் வேறாக்கப்பட்டுள்ளனர்.

விருப்புரிமை அடிப்படையில் உள்ளீர்க்கப்படுவர் எனத் தெரிவித்து படிவம் விநியோகிக்கப்பட்ட போதும் அதில் எந்த மாகாணத்தில் பணியாற்ற விரும்புகின்றீர் என்ற வினா கேட்கப்படவில்லை. இதனால் தாம் விரும்பாத மாகாணத்திலும் கடமையாற்ற வேண்டியுள்ளதாக என உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - உள்ளீர்ப்புப் படிவங்கள் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. (202-95)

# கடந்த வருடம் பத்திரிகைச் சுதந்திரம் உலகெங்கும் படுமோசமாகப் பாதிக்கப்பட்டது

கடந்த வருடம் உலகெங்கும் இராணுவப் புரட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகள் நசுக்கப்படுவதுபோன்ற செயற்பாடுகளின் காரணமாக பத்திரிகைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்று அமெரிக்காவில் செயற்பட்டுவரும் சுதந்திர இல்லம் (Freedom House) என்ற கண்காணிப்பு நிறுவனம் கருத்து வெளியிட்டுள்ளது.

உலக பத்திரிகைத்துறை சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில், ஆசியா, முன்னைய சோவியத் யூனியன் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரமானது குழப்பகரமான நிலைமையை நோக்கி நகர்கின்றது.

நிலக்கரி சுரங்கத்தில் சிக்கிய பறவையைப் போல பத்திரிகைச் சுதந்திரம் இன்று தவிக்கின்றது என்று தெரிவித்துள்ளது.

தாய்லாந்து ஸ்ரீ லங்கா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் மற்றும் பிஜித்தீவுகள் போன்ற நாடுகளில் தோன்றிய இராணுவப் புரட்சிகள், பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் அவசரகால நிலைமைகள் பத்திரிகை சுதந்திரத்தை படுமோசமாகப் பாதித்துள்ளன என்று அவ்வறிக்கை கூறுகிறது. (ப)

# புலிகளின் விமானங்களை இடைமறித்து இலங்கை விமானப்படையால் தாக்கமுடியாது

## விமானப்படையின் முன்னாள் தளபதி கூறுகிறார்

கொழும்பு, மே 3

ஸ்ரீ லங்கா விமானப்படையின் வானூர்திகளால் புலிகளின் வானூர்திகளை இடைமறித்துத் தாக்க முடியாது.

இவ்வாறு ஸ்ரீ லங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

''ஹிந்துஸ்தான் ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் தெரிவித்துள்ள விடயம் வருமாறு:-

ஸ்ரீ லங்கா வான்படையிடம் உள்ள கிபிர் மற்றும் மிக்ரக வானூர்த்திகளால் தமிழீழ விடுதலைப் புலிகளின் வானூர்திகளை இடைமறித்துத் தாக்கமுடியாது. அதற்கான வசதிகள் இவற்றில் இல்லை.

மரங்களை அழிக்க அவற்றின் அடிமரத்தை வெட்டுவதுபோல் புலிகளின் வானூர்திகளைத் தரையில் வைத்தே அழிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் வானூர்திகளின் தரிப்பிடங்களை அறிந்தால் அவற்றின் மீது கிபிர் மற்றும் மிக் வானூர்திகள் மூலம் குண்டுத் தாக்குதல்களை நடத்தி அழிக்க முடியும். இதனைவிட வேறு வழி எதுவுமில்லை. இது கூட இலகுவான விடயம் அல்ல.

புலிகள் வலுவான பாதுகாப்புச் செய்யப்பட்ட நிலக்கீழ் தரிப்பிடங்களில் தான் வானூர்திகளை நிறுத்துகின்றனர்.

ஸ்ரீ லங்கா [illegible] வில் உள்ளவற்றைத் துல்லியமாக வேவு பார்க்கும் வானூர்திகள் உள்ளன. அவற்றின் மூலம் புலிகளின் விமானத் தளத்தை இனங்காண முடியும்.

நிலத்துக்குக் கீழ் வானூர்திகள் நிறுத்தப்பவதால் பதுங்கு குழிகளைத் துளைத்துத் தாக்கும் குண்டுகளைப் போடவேண்டும்.

ஆனால், அதுவும் சரியான இலக்குக்குப் போடப்படுமா என்பது உறுதியானது அல்ல.

புலிகளின் வானூர்திகள் தெரிவு செய்த சிறிய பரப்பளவு கொண்ட இலக்குகளையே தாக்கிவிட்டுப் போகின்றன - என்று அவர் தெரிவித்துள்ளார். (203)

## துடுப்பாட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இணுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் செலிங்கோ காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் வைத்தியர் இராமலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இதற்கு விளையாட்டுக் கழகங்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 9 பேர் பங்கு பற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டியாக இது நடைபெறவுள்ளது.

இணுவில் சுகானா கிவ்ற் செலக்ஷன், யாழ்ப்பாணம் அம்பாள் மல்ரி கூட்ஸ், திருநெல்வேலி தமிழீசன் பழவாணிபம், இணுவில் பெஷன் டுடே, இணுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியவற்றில் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கழகத்தினர் கேட்டுள்ளனர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி பு.அகிலலோகநாயகம்
அவர்களின் பாசமிகு மாமி
**திருமதி பூலோகசிங்கம் இராசலட்சுமி**
அவர்கள் காலமாகியதையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை. (60199) ஆசிரியர் கழகம்.

## பின்தங்கிய சபைகளை தரமுயர்த்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள பின்தங்கிய பிரதேச சபைகள், நகர சபைகள் என்பன தரமுயர்த்தப்படவுள்ளன.

பின்தங்கிய பிரதேசசபைகள், நகரசபைகள் ஆகியவற்றை இனங்காண்பதற்கான படிவங்களை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல சபைகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார். (1-203-95)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

விசுவேச விநாயகர் ஆலய பரிபாலன சபையின் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து தொண்டாற்றி 03.04.2007 அன்று இறைவனடி சேர்ந்த
**செல்லத்துரை லிங்கநாதபிள்ளை**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விசுவேச விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை, ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலயம்,
ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை.

## விற்பனைக்கு

4'' கொங்கிறீற் கற்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776 914058.

## கப்பல் சேவை

புகையிலை, சுருட்டு, வெங்காயம் மற்றும் பனை உற்பத்திப் பொருள்கள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்ப விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

G.திருவருள்
KOBIRAJA TRANSPORT
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
தொ.பே. 0773638459

## Jaffna College Undergraduate Dept

464, Hospital Road,
Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**
(Jaffna University)

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கைநெறிகள்.
**ACBF, CBF**
ஆரம்பம் : 05.05.2007 (Sat)

**SINHALA CLASSES**
Spoken Sinhala & G.C.E (O/L)
ஆரம்பம் : 04.05.2007 (Friday)
நேரம் : 10.30 மணி.

**PHARMACISTS' (EXTERNAL) EXAMINATION COURSE**
Min. Qualification - G.C.E. O/L Eng. ord. Pass
G.C.E. A/L 3 Passes including Chemistry.

Director.

(60212)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு கைலாசபிள்ளை விக்னேஸ்வரன்**

அன்பு பண்பு அறம் வீரம் திறன் தன்னகத்தே ஒருமிக்க கொண்ட ஒரு வங்கியாளன் என்ற பெயரையுடைய நீங்கள் இன்று தங்கள் சேவையில் வெள்ளிவிழா காணுவதையிட்டு பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.
எஸ்.இரவிவர்மன்
போட்டோ அன் வீடியோ
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

பண்பிலே உயர்ந்தவராய் பழகுவதற்கு இனியவராய் இன்முகம் காட்டி எல்லோரிடமும் இன்சொல் காட்டி வாடிக்கையாளர் இதயக் கமலத்தில் இடம்பிடித்த வங்கியாளனே என்றென்றும் மக்களுக்காக உதவிகள் புரிந்து நீங்கா இடம்பிடித்த விக்கியை இந்நாளில் வாழ்க வளர்க என வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.
சுந்தர்சன்
யாழ்.வீதி, மானிப்பாய்.

யாழ். இந்துக் கல்லூரியின் ஒரு பிரபல மாணவனாகவும் மாணவ முதல்வராகவும் பழைய மாணவ சங்க செயற்குழு உறுப்பினராகவும் சிறந்து விளங்கும் திரு. கைலாசபிள்ளை விக்னேஸ்வரன் வங்கிச் சேவையில் இன்று 25 ஆண்டுகள் சேவையாற்றி வாடிக்கையாளர்களது நன்மதிப்பை பெற்று வெள்ளி விழா காணும் இந்நாளில் வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்.
ஸ்ரீ வாணி நகையகம்
173, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கியில் 25 ஆண்டுகள் சேவையாற்றி பல நண்பர்களாலும் வாடிக்கையாளர்களாலும் விக்கி அண்ணா என செல்லமாகவும் அன்பாகவும் உரிமையுடனும் அழைக்கப்படும் தாங்கள் இன்று இலங்கை வங்கியில் 25ஆண்டுகள் சேவை புரிந்து வெள்ளிவிழாக் காணும் இந்நாளில் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அக மகிழ்ந்து மனமார வாழ்த்துகின்றோம்.
விஜித்தா துணிப் பூங்கா
109, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பேச்சுத்திறன் அறிவுத்திறன் செயல் திறன் போன்றவற்றை தன்னகத்தே கொண்டு பல வாடிக்கையாளர்களைத் தன்பக்கம் ஈர்க்கும் திறன் கொண்ட திரு. கைலாசபிள்ளை விக்னேஸ்வரன் ஒரு வங்கியாளனாக 25 வருடங்கள் சேவையாற்றி இன்று 03.05.2007 வெள்ளிவிழா காண்பதோடு மட்டுமன்றி சிறந்த சமூக சேவையாளராகவும் பல ஆண்டுகள் நலத்துடன் நற்சேவை புரிய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
சோ.சதானந்தன்
ஈசன் மொத்த விற்பனையகம்,
63, பருத்தித்துறை வீதி, யாழ்.

வங்கிக்கு சென்றவுடன் ஒரு புன்னகையுடனான முகம் எங்களை நோக்கி வரவேண்டும் எனக் கூறி வரவேற்கும் படித்தோர் - படியாதோர் - ஏழை - பணக்காரர் என வித்தியாசம் இன்றி எல்லோரும் உரிமையுடன் நாடிச் செல்லும் உத்தமன். செயல்வீரன் என்ன விடயமாக வந்தீர்கள் என்ன செய்யவேண்டும் என வினவி மேலதிகாரிகளிடம் விவரங்களை விளக்கமாக எடுத்தியம்பி எங்கள் குறைதீர்த்த மண்டைதீவுக் கிராமத் தலைவரின் மகனே இந்நாளில் உன்னை வாழ்த்துவதில் அகமகிழ்கின்றோம்.
அருன்ஸ் பான்சி
102, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மண்டைதீவு மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்து, யாழ். இந்து பெற்றெடுத்த உத்தம செயல் வீரனே இப்புவியில் வங்கி என்ற மூன்றெழுத்துக்கு 'விக்கி' என்ற மூன்றெழுத்தை நினைவுபடுத்தும் உத்தம நண்பனே இந்நாளில் 25ஆண்டுகள் வங்கிச் சேவையாற்றி இன்னும் பல ஆண்டுகள் நற்சேவை புரியவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துவதோடு பெருமையடைகின்றோம்.
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இலங்கை வங்கி என்றவுடன் விக்கி என்ற மூன்றெழுத்தே வாடிக்கையாளர்களுக்கு முன் நிற்கின்றது. தங்களது சேவையால் பல வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே கொண்டு தாங்கள் இன்று 03.05.2007 இல் வங்கித்துறையில் வெள்ளிவிழா நாயகனாக விளங்குவதையிட்டு நாங்கள் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
பால்விநாயகர் மோட்டோர்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்!

இன்று (03.05.2007) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் உடுப்பிட்டியில் அமைந்துள்ள மதுஷன் பல்பொருள் வாணிபத்தினர் நெல்லியடி - கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள மருதம் கட்டடத்தொகுதியில் தமது கிளை நிறுவனமாக

## மதுஷன் பல்பொருள் வாணிபம்

என்னும் மொத்த வியாபார நிலையத்தை மங்களகரமாக ஆரம்பிக்க உள்ளனர். அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். வீதி, உடுப்பிட்டி.
தொ.பே. 021 226 4697,
021 226 3468.

**மதுஷன் பல்பொருள் வாணிபம்**
**& எமரால்ட் ஹாட்வெயர்**
**உரிமையாளர்களும், ஊழியர்களும்.**

(60219)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சுதந்திரக் கட்சியின் யோசனை வெளிப்படுத்தும் உண்மைகள்

இலங்கையின் அரை நூற்றாண்டு காலத் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அரை வேக்காட்டுத்திட்டம் ஒன்றை - யோசனை ஒன்றை - முன்வைத்திருக்கின்றது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

*''சிங்கள ஆட்சியாளர்களின் நீண்டகால வரலாற்றுப் பின்னணி கொண்ட ஏமாற்று நாடகத்தின் மற்றோர் அங்கமே இந்த யோசனை. பரிசீலனைக்குக்கூடத் தமிழர்கள் தொட்டுப்பார்க்கவும் அருகதையற்றது அது''* - என அடியோடு அதனை நிராகரித்து இலங்கைத் தமிழர்களின் ஒட்டு மொத்தக் கருத்தைப் பிரதிபலித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினர் முதல் வீ.ஆனந்தசங்கரி வரை இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களின் தரப்புகள் எல்லாமே இந்த யோசனைகளை ஒட்டுமொத்தமாக நிரகரித்திருக்கின்றார்கள்.

பௌத்த - சிங்களப் பேரினவாதத் திமிரின் ஒட்டு மொத்த வெளிப்பாடாக முன்நிறுத்தப்பட்டிருக்கின்றது இந்த யோசனைத்திட்டம் என்றால் அது மிகையாகாது. இந்தத் திட்டத்தின் இரண்டு அடிப்படைகள் இங்கு முக்கியமாகக் கவனிக்கத்தக்கவை.

ஒன்று - பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் பேரினவாதச் சிந்தனை அதில் முழு அளவில் உறுதியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்தது - அரைகுறை அதிகாரப் பகிர்வை - அதுவும் மாவட்ட மட்டத்திற்கு வழங்குவதாகக் கூறுவதன் மூலம் தமிழரை அடிமைப்படுத்தும் மேலாண்மைச் செருக்குப் போக்கிலிருந்து தான் விடுபடப் போவதில்லை என்பதை சிங்களம் மீளச் சூளுரைத்து நிற்கின்றது.

இதில் முதல் விடயமான பௌத்த - சிங்களப் பேரினவாதச் சிந்தனையை நிலைநாட்டும் விவகாரத்தில் ஸ்ரீல. சு. கட்சியின் ஸ்தாபகர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் சிங்களத் தேசியவாத மமதைப் போக்கின் அடுத்த வரலாற்று நாயகனாகத் தன்னை நிலைநிறுத்த முயல்கிறார் அரசுத் தலைவர் மஹிந்தர்.

அடுத்த விவகாரத்தைப் பொறுத்தவரை - மாவட்ட மட்டத்தில் அதிகாரப்பகிர்வு என்று கூறுவதன் மூலம் - எண்பதுகளின் முற்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் முன்வைக்கப்பட்டு, தமிழர்களால் நிராகரிக்கப்பட்டு, செயலிழந்து பயனற்றுத் தோற்றுப் போன - உப்புச்சப்பற்ற - மாவட்ட அபிவிருத்திசபைத்திட்டத்தை - மஹிந்தரின் கட்சி மீளத் தூக்கிப் பிடித்திருக்கின்றது.

ஆக, பௌத்த - சிங்கள மேலாண்மை ஆதிக்கச் சிந்தனையோடும், தமிழர்களுக்கு நீதியான - நியாயமான - அதிகாரப் பகிர்வை வழங்க மறுக்கும் பிடிவாதத்தோடும் இந்தத் திட்டத்தை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆளும் கட்சியின் யோசனையாக வெளிப்படுத்தியதன் மூலம், பண்டாரநாயக்காவின் பௌத்த - சிங்களத் தேசியவாதத்தையும், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தமிழர்களை அடிமைப்படுத்தும் அதிகாரவாதத்தையும் பிரதிபலித்து, அந்த இரு தலைவர்களும் ஒன்று சேர்ந்த மறு அவதாரமாகப் பேரினவாதச் சிங்களவர்கள் முன்னிலையில் தம்மைத் தூக்கி நிறுத்தியிருக்கின்றார் மஹிந்தர்.

இது இப்படித்தானாகும் என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது கடந்த வருட மாவீரர் தின உரையில் ஏற்கனவே திட்டவட்டமாக வெளிப்படுத்தியிருந்தார்.

பற்றியெரியும் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு சிங்களத்தின் ஆளும் வர்க்கம் நீதியான தீர்வை ஒருபோதும் முன்வைக்கப்போவதில்லை. தமிழர்களுக்கு எதிரான தனது இன அழிப்புப் போரைத் தொடர்வதற்காக அனைத்துக் கட்சி மாநாட்டை தென்னிலங்கைச் சிங்களம் சாகாது வைத்து இழுத்தடிக்கும் - என்று பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார். அதுவே யதார்த்தத்தில் நடந்து கொண்டிருக்கின்றது.

அதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் இப்போது தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*''தமிழர்கள் தொட்டுக்கூடப் பார்க்கும் தகுதியோ, அருகதையோ அற்ற இந்த யோசனைத் திட்டத்தை முன்வைத்ததன் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு கௌரவத்துடன் கூடிய நீதியான தீர்வை வழங்கி, இணைந்து வாழ்வதற்குத் தாங்கள் தயாரில்லை என்பதை சிங்கள ஆட்சி தெளிவுபடுத்திவிட்டது. இந்த உண்மையை உலகு தெளிவாகக் கண்டுகொள்ளவும் - புரிந்துகொள்ளவும் - வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இராணுவ ரீதியில் தமிழர்களை வெல்வதற்கான முனைப்புடன் முன்னெடுக்கப்படும் போரியல் தந்திரங்களுக்கான அவகாசத்தைப் பெறவே சிங்கள ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம், உருப்படியற்ற, அரைகுறைத் தீர்வு யோசனைகளை முன்வைத்து, காலத்தை இழுத்தடித்து, ஏமாற்று நாடகங்களை அரங்கேற்றுகின்றனர்.*

*''இலங்கை இனப்பிரச்சினையில் சிங்களத்தின் சதித் தந்திரோபாயத்தை இந்தியாவும் சர்வதேச சமூகமும் சரியாக எடைபோட்டுக் கணித்துத் தீர்மானம் எடுக்க இது வாய்ப்புத் தந்துள்ளது.''* - என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றமை ஒட்டுமொத்தத் தமிழினத்தின் கருத்துத்து வடிவமே.

ஏற்கனவே புலிகளோடு நடத்தப்பட்ட சமாதான பேச்சுகளில் எட்டப்பட்ட தீர்வுகளை அடிப்படையாக வைத்து அமைதி முயற்சிகள் தொடர வேண்டும் என சர்வதேச சமூகம் வலியுறுத்த, அவற்றையெல்லாம் தூக்கிக் கடாசிவிட்டு, இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிராகரிக்கப்பட்டு, குப்பைக்குள் வீசப்பட்ட 'மாவட்ட மட்ட அதிகாரப் பகிர்வு' என்ற உளுத்துப்போன திட்டத்துடன் வந்திருக்கின்றார் மஹிந்தர்.

தமிழர்களின் சுயநிர்ணயப் போராட்டத்தின் பின்னால் புதைந்து கிடக்கும் நியாயத்தை, தென்னிலங்கைச் சிங்களத்தின் மேலாதிக்கத் திமிர்ப்போக்கைப் பிரதிபலிக்கும் இந்த யோசனைத் திட்டம் வாயிலாக உணரக்கூடிய சந்தர்ப்பம் சர்வதேச சமூகத்துக்குக் கிட்டியிருக்கின்றது.

தமிழர்களுக்கு நீதி செய்ய - கௌரவத்துடன் கூடிய வாழ்வை வழங்க - அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்ய - மறுக்கும் சிங்களப் பேரினவாதத்தின் இந்தத் திமிர்ப் போக்குக் குறித்து உலகின் பதில் என்ன? சர்வதேசம் இனி என்னதான் செய்யப்போகிறது. அதனிடம் உருப்படியான அணுகுமுறை ஏதாவது உண்டா?

அமைதித் தீர்வுக்கான ஆளுங்கட்சியின் விட்டுக் கொடுப்பு இவ்வளவுதான் என்பதை எழுத்தில் படித்துப் புரிந்த இந்த நிலைமையின் பின்னராவது, தமிழர்களின் சுயநிர்ணயப் போராட்டத்தை அங்கீகரிக்க சர்வதேச சமூகம் காலம் தாமதியாது முன்வரவேண்டும். அதுதான் நீதியானது; தமிழர்களுக்கு நீதியுடனும் கௌரவத்துடனுமான ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்கவல்லது.

# திருமலையில் இருந்து எடுத்து வரப்பட்ட தபால்கள் இன்றுமுதல் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 3

திருகோணமலையில் கடந்த நான்கு மாதங்களாகத் தேங்கிக் கிடந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள தபால் பொதிகள் நேற்றுத் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. அத்தபால்கள் இன்று உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

திருகோணமலையில் மொத்தம் 5,000 தபாற் பொதிகள் தேங்கியிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை உணவுப் பொருள்கள் உள்ளடங்கியனவாகும்.

'இந்துருவலி' கப்பலில் எடுத்து வரப்பட்ட இப்பொதிகள் நேற்று முன்தினம் யாழ்.தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

நேற்று விடுமுறை தினமாக இருந்த போதிலும், யாழ்.பிரதம தபால் நிலைய ஊழியர்கள் பொதிகளைத் தரம் பிரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தரம் பிரிக்கப்பட்ட தபால்கள் இன்று தொடக்கம் விநியோகிக்கப்படும் என்று வடபிராந்திய பிரதித் தபால் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார். (அ-1-111)

## கைதடியில் சிதைந்த நிலையில் சடலம்

கைதடி, நவபுரம், மட்டுவில் வீதியில் மயானத்திற்கு அண்மையில் அடையாளம் தெரியாத சடலம் நேற்றுக் காணப்பட்டது.

சுமார் 40 வயது மதிக்கத்தக்கவர். கறுப்பு நிற ஜீன்சும், பச்சைக் கோடு போட்ட ரீ சேட்டும் அணிந்துள்ளார். தலையில் சூட்டுக் காயமுள்ளதாகக் கூறப்பட்டது. சடலம் சிதைந்த நிலையில் காணப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். சடலத்தை இனங்காண நடவடிக்கை எடுக்குமாறு பொலி ஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(1-75-78)

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்கள் கொமர்ஷல் வங்கியினால் கௌரவிப்பு

நல்லூர், மே 3

கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையின் "அருணலு" பரிசளிப்பு விழா நேற்று புதன்கிழமை வங்கியின் முகாமையாளர் எஸ்.ரவீந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கொமர்ஷல் வங்கி சாவகச்சேரிக் கிளையில் தமது பரிசில்களைப் பெற்றுக் கொள்ளத் தவறிய சிறுவர்களுக்கும் இங்கு வைத்துப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயப் பதில் உதவிப் பணிப்பாளர் (ஆரம்பப் பிரிவு) பி.குகதாசனும் வங்கி அதிகாரிகளும் சிறுவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தினர் பி.குகதாசன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் எஸ்.ஞானகாந்தன், செல்வி காயத்திரி உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

மாணவர்கள் தமது திறமையைப் வெளிப்படுத்தும் விதத்தில் பேசியும், பாடல்களை இசைத்தும் சபையோரின் பாராட்டைப் பெற்றனர்.

மாணவர்களுடன் அவர்களின் பெற்றோர்கள், அவர்களுக்குப் பயிற்றுவித்த ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரும் பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கொமர்ஷல் வங்கியின் ''அருணலு'' சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி கௌரவித்து ஊக்குவிக்கும் நிகழ்வு வருடாந்தம் நடத்தப்படுகின்றது.

(அ-111)



கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையில் நேற்று நடைபெற்ற 'அருணலு' பரிசளிப்பில் யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.குகதாசன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும், கிளை முகாமையாளர் எஸ்.ரவீந்திரா உரையாற்றுவதையும், பரிசில் பெற்ற மாணவ, மாணவிகளையும் படங்களில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)

## சீரணி நாகபூஷணி தீர்த்த உற்சவம் இன்று

சீரணி நாகபூசணி அம்மன் ஆலயத்தில் தீர்த்த உற்சவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத் தேர்த்திருவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் அம்மன் அருள்வேண்டித் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர். (அ-1)

## பாலர் பராமரிப்பு நிலைய மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக சிறுவர் நன்நடத்தை அலுவலர் க.சிவகரனும், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசாவும் கலந்து கொள்வர். (1-207)

## வடமராட்சியில் மீட்ட கிளைமோர் வெடித்தது

நவிண்டில்- வதிரி வீதியில் மடத்தடியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிளைமோர் ஒன்றைப் படையினர் மீட்டுள்ளனர்.

இக்கிளைமோரை மீட்ட சமயம் அது வெடித்ததில் சிப்பாய் ஒருவரின் கையில் காயம் ஏற்பட்டது. அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, பின் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (1-155-115)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை - 21 | வெள்ளிக்கிழமை 04.05.2007 |
| திதி: துதியை | முன்னிரவு : 06.48 |
| நட்சத்திரம்: | அனுசம் பின்னிரவு : 12.27 |
| சுபநேரம் | : 05.56 - 07.26 |
| ராகுகாலம் | : 10.26 - 11.56 |

## வாசகர் திருமுகம்

### பல்கலை. மாணவர் பெற்றோரின் மனங்களில் தயவுசெய்து நெருப்பைக் கொட்டாதீர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் திரும்பவும் தடைப்படக் கூடிய நிலைமை உருவாக உள்ளது என்ற பேரவையின் கவலையை உங்கள் பத்திரிகையில் வாசித்து மனமுடைந்த நிலையில் இந்த மடலை வரைகின்றேன். தயவு செய்து இதைப் பிரசுரித்து என்போன்ற பெற்றோரின் மன அழுத்தத்தைச் சம்பந்தப்பட்டோர் அறிய வழிசமைக்குமாறு விநயமாக வேண்டுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதால் தமிழ்ச் சமூகத்தின் நீண்டநாள் கனவொன்று நனவானதும், எம்மவரில் பலர் பல்கலைக்கழகமொன்றில் வேலை செய்யும் வாய்ப்பு உருவானதும் உண்மை. ஆனால் எமது பிள்ளைகளில் அனேகமானோர் ஏனைய பகுதிப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வாய்ப்பை இழந்தனர். இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகத்துக்கு எமது பிள்ளைகளின் கல்வி பற்றிப் பாரியதொரு சமூகப் பொறுப்பு உள்ளது. இப்பொறுப்பை உணர்ந்து பல்கலைக்கழகம் தனது கடமையை நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றும் என்பதுதான் என் போன்ற பெற்றோரின் எதிர்பார்ப்பாகும்.

முன்னைய காலங்களில் ஏனைய பல்கலைக்கழகங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளால் கல்விச் செயற்பாடுகளுக்குத் தடைகள் ஏற்பட்ட சமயங்களில் கல்விச் செயற்பாடுகளைத் திடசங்கற்பத்துடன் சீராக நடத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பெருமையடைந்தது. இது இன்று பழங்கதையாகிவிட்டது. இது பெரும் கவலைக்குரியது. அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணப் பல்..லைக்கழகத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளால் கல்வி நடவடிக்கைகளுக்கு அடிக்கடி தடைகள் வருவது வழமையானதொரு விடயமாகிவிட்டது.

அதிலும் குறிப்பாக 2005ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து இராணுவ அரசியல் அணுகுமுறைகளாலும் அதன் விளைவான பணிப்புறக்கணிப்பு போன்றவற்றாலும் கற்றல் நடவடிக்கைகள் முழு அளவில் நடைபெறவில்லை. மேலும் இதற்கு சிகரம் வைத்தாற்போல் 2006ஆகஸ்டில் உருவாக்கப்பட்ட யுத்த சூழலால் பல்கைலைக்கழகத்தின் இயக்கம் முற்றாக ஸ்தம்பித்தது. கடந்த பதினைந்து மாதங்களில் ஐந்து மாதக் கற்றல் செயற்பாடுகள்தான் இடம்பெற்றிருக்கும் எனலாம்.

இக்காலப் பகுதியில் பல்கலைக்கழகத்தில் படிக்கும் பிள்ளைகளின் என்னைப் போன்ற ஏழைப் பெற்றோர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டி வைத்திருக்கும் மன அழுத்தத்துடன் சீவித்ததை பல்கலைக்கழகச் சமூகத்தில் - குறைந்த பட்சம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளை உடைய ஒரு சிலராவது உணர்ந்திருப்பார்கள் என நம்புகின்றேன். பிள்ளை ஒன்றின் பல்கலைக்கழகப் படிப்புப் பருவமானது அப்பிள்ளையின் வாழ்வில் மீண்டும் ஈடுசெய்ய முடியாத காலப்பகுதியாகும். இப்பருவகாலம் நீளும் போது அப்பிள்ளை பல வா ப்புகளை இழந்து விடுகின்றது. அப்பிள்ளையின் பெற்றோர் தமது எதிர்பார்ப்புகளை அடைய முடியாது துக்கத்தில் ஆழ்ந்து நடைப்பிணங்களாக மாறுகின்றனர். இவையெல்லாவற்றையும் விட ஒரு மாணவனிடமிருந்து சமுதாயம் பெற வேண்டியவற்றை பெறவேண்டிய காலத்தில் பெறமுடியாததாகின்றது. இழப்புகளையே வாழ்க்கை வரலாறாகக் கொண்ட எமது சமுதாயம் இந்த நிலையையும் தாங்க வேண்டும் என்று எண்ணலாமா?

இக்கட்டிலுள்ள எமது சமுதாயத்துக்கு வலுவூட்டி என்னைப் போன்ற ஏழைப் பெற்றோரின் எதிர்பார்ப்புகளை ஈடேற்றுவது பல்கலைக்கழகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள காலத்தின் கடமையாகும். அதனைச் சம்பந்தப்பட்ட சகலரும் உணர்ந்து பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் இடையூறு இன்றி நடைபெற உதவ வேண்டுமென்ற மன ஆதங்கத்தை பெற்றோர்கள் சார்பில் வெளிப்படுத்த விரும்புகின்றேன். எங்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்குத் தடங்கல்களைப் போட்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை மழுங்கடிக்க எவருக்கும் உரிமையில்லை. இது மாணவர்களினதும் பெற்றோர்களினதும் மனித உரிமைகளை மீறும் செயற்பாடாகும்.

எந்தத் தரப்பினரானாலும் சரி, என்னைப் போன்ற பல்கலை. மாணவரது பெற்றோரின் மனங்களில் தயவு செய்து நெருப்பைக் கொட்ட முனையாதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

...த்துறை. விக்னேஸ்வரமூர்த்தி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 20 * 02 * 1952



கண் நெகிழ 13 * 05 * 2006

### சிதம்பரப்பிள்ளை கிருஸ்ணசாமி

பண்பொடு பாசப் பரிவினை யூட்டி
பாரினில் எம்மைப் பலமுடன் காத்தீர்
உற்றவருக்கு உறுதுணையாகி
உத்தமராக உலகினில் வாழ்ந்தீர்.

நினைவது நீள மனமது சோர
நிம்மதியின்றி நாம் அழுகின்றோம்
நின்தனின் ஆத்மா நிலையடி காண
நாதனை நாளும் நாம் தொழுகின்றோம்.

லவ் லேன்,
உடுவில். (60209)
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா சிவகுரு

(முன்னாள் உரிமையாளர்- தேநீர்சாலை, பழைய புகையிரத நிலையத்தடி, மீசாலை)

கண்டிவீதி, மீசாலையைச் சேர்ந்தவரும் தும்பளையைத் தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமான தம்பையா சிவகுரு நேற்று (02.05.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் மகனும் உதயலட்சுமியின் (தும்பளை) கணவரும் சரஸ்வதி, காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் சேதுப்பிள்ளை ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாஸ்திரியார் வீதி,தும்பளை, பருத்தித்துறையில் இன்று (03.05.2007) வியாழக்கிழமை மு.ப.9 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தும்பளை. குடும்பத்தினர்.

### செல்லையா யோகலிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகலிங்கம் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை-நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் கணவரும் சுகிந்தா (லண்டன்), குமுதா ஆகியோரின் தந்தையும் கமலசிறி (லண்டன்), தர்மகுலராஜா (ரமேஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் நாகராஜா (வல்வெட்டி), ராஜசிங்கம் (லண்டன்), சவுந்தலாதேவி (கனடா), கௌசலாதேவி ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2007) வியாழக்கிழமை மதியம் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அளவெட்டி வடக்கு. (60239) மகள், மருமகன், சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### செல்லையா பூவிலிங்கம் - மனேஜர்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம், வலி.கிழக்கு, நீர்வேலி)



நல்லூர் வடக்கைச் சேர்ந்த செல்லையா பூவிலிங்கம் நேற்று (02.05.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி-லீலாவதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் பத்மலிங்கம் (கொனிக்கா கலர் லாப்), பத்மகரன் (வள்ளல் தளபாட நிலையம்), பத்மபிரியா, லிங்கநாதன் (R.S-வலி.கிழக்கு பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அபிராமி, நிஷாந்தினி, ஜெயந்தன் (மங்களா காட்சியறை, சிற்றிரெக்ஸ்) ஆகியோரின் மாமனும் சரண், ஐதுசன், சதுர்த்திகன், ஆதித்தியன், தருணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பாலசிங்கம் (ஈழநாடு), தில்லைநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்), கமலாதேவி, குஞ்சிதபாதம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), குகதாசன் (ஓய்வுபெற்ற வலி.கிழக்குப் பிரதேச சபை செயலாளர்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற அரியம்மா, மகேஸ்வரி (கொழும்பு), மகேந்திரா (சுவிஸ்), பாலேந்திரா (கொழும்பு), தெய்வேந்திரா (டென்மார்க்), யோகேஸ்வரி (டென்மார்க்), புஸ்பவதி (கொழும்பு), கமலாதேவி, ராஜேந்திரா (சுவிஸ்), புவனேந்திரா (டென்மார்க்), கஜேந்திரா (ஆஸ்திரேலியா), சரஸ்வதி (கனடா), திலகவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2007) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் நல்லூர் வடக்கில் அமைந்த இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

77/1, விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். தொ.பே: 0776391080

தகவல்:
[illegible]

## வவுனியாவில்...

ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீரகுளத்தைச்சேர்ந்த தங்கராசா ஜெயக் குமார் (வயது 29) என்பவர் வவுனியா மில்வீதியில்வைத்துநேற்றுமுன்தினம்இரவுசுட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலைகள் குறித்த விசாரணைகள் வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (சி)

## பிரிட்டிஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் பிரதித் தூதுவரின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக நேற்று மாலை தூதரக வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கான காரணம் வெளியிடப்படவில்லை.

பாதுகாப்புக்காரணங்களுக்காக வன்னி செல்ல வேண்டாம் என அரசுத் தரப்பு அறி வுறுத்தியதன்பேரிலேயே அவர்விஜயத்தை ஒத்தி வைத்தார் என்று தகவல் ஒன்று தெரி வித்தது? எனினும் அத்தகவலை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

கடந்த மாதம் 23ஆம் திகதி நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் வன்னி செல்லத் திட்டமிட்டிருந்ததும் அரசு தடை விதிதால் நிறுத்தப்பட்டதும் தெரிந்தவையே.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் ஒரு முழுமையான சமநிலையை கடைப்பிடிக்கிறது. விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு ஆகிய இருதரப்புகளுடனும் நாம் தொடர்பில் இருக்கிறோம்'' - என்று அவர் கூறினார்.

''இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ வழித்தீர்வு கிடையாது என்று பிரிட்டிஷ் அரசு நம்புகிறது. ஓர் உடன்பாடு குறித்த நம்பகத்தன்மை மிக்க கட்டமைப்பு தேவை. அனைத்து இலங்கையர்களும் மனித உரிமைகளை மதிக்கவேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

''இலங்கையில் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்துவதற்காக முடிந்தவரையில் பங்களிப்பு வழங்க பிரிட்டன் தயாராகவே இருக்கிறது. என்றும் அவர் கூறினார்.

இந்த விவாத்தில் உரையாற்றிய கன்ஸர்வேட்டிங் கட்சியின் உறுப்பினர் ஜெவ்ரி கிளிவ்டென் பிறவுண் தெரிவித்தாவது:-

இலங்கையில் வன்முறை அதிகரித்து நிலைமை மோசமடைந்தமைக்கு இலங்கை அரசுக்கு பங்கே இல்லை என்று கூறிவிட முடியாது. நாட்டின் வடபகுதியான யாழ்ப்பாணத்தை இணைக்கும் முக்கியமான வீதியான ஏ-9 நெடுஞ்சாலையை அரசு மூடியமை இலங்கையை மேம்படுத்த உதவில்லை. இதுதவிர இலங்கையின் வடக்கு-கிழக்கு மக்களுக்கு உதவி மிகவும் அவசியமாக தேவைப்பட்ட நிலையில் சர்வதேச உதவி நிறுவனங்கள் அங்கு செல்ல அரசு அனுமதி தரவில்லை என்பதும் ஏற்றுக்கொள்ள இயலாதது.

சிறுபான்மையினருக்கு இலங்கை அரசியலில் பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்பது தீவிரமாகப் பரிசிலிக்கப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நீண்டகால அரசியல் தீர்வு எட்டத் தகுதியுடையதாக இலங்கை அரசு மாறவேண்டுமானால் அனைத்துத் தரப்பினையும் உள்ளடக்கிய ஓர் அரசியல் வழிமுறை என்பது மிகமிக அவசியம். தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்பது தெளிவாக்கப்படவேண்டும்.

இனப்பிரசினையைத் தீர்ப்பதில் இந்தியாவின் பங்கு குறித்தும் நான் இங்கு கூறவிரும்புகிறேன். இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பத்தில் இந்திய அரசுக்கு முக்கிய பங்கு இருப்பதாக நான் நம்புகிறேன்.

விடுதலைப் புலிகளின் கொள்கைகளுக்கு இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள மக்ளிடையே நல்ல ஆதரவு இருப்பது தெளிவு என்றார்.

## சு.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தம் மூலம் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டு, அதுவும் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவு செய்யாமல் தோல்வி கண்டுள்ளது.

இந்நிலையில், அந்த ஒப்பந்தத்தின்கீழ் இணைக்கப்பட்ட தமிழர்தாயகத்தை இப் போது இரண்டாகப் பிரித்த கொழும்பு அரசு, அந்த மாகாணசபைத் திட்டத்தையே நிராகரித்து அதற்கும் கீழிறங்கி மாவட்ட மட்ட அதிகாரப் பகிர்வை பிரஸ்தாபித் திருப்பது புதுடில்லிக்குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மூன்று தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கின்றார். ஒவ்வொரு முறையும் புதுடில்லி அரசின் உயர்மட்டத்துடன் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்து அவர் பல தடவைகள் விரிவாகப் பேசியிருக்கின்றார்.

### சமாளிக்கும் ஏமாற்று முயற்சியா?

இதேபோன்று இக்காலப் பகுதியில் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஒருதடவையும், வெளிவிவகாரச் செயலர் இரண்டு தடவைகளும் கொழும்பு வந்திருந்தபோது இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்து ஒவ்வொரு முறையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேரில் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்தஆறுசந்திப்புகளின்போதும், இனப்பிரச்சினைக்கு நியாயமானதீர்வுயோசனைத்திட்டம் ஒன்றை - அதிக அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய தீர்வு ஏற்பாடு ஒன்றை - அரசுத்தரப்பு வெளியிடுவதன் மூலமே மோசமடைந்து வரும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கட்டுக்குள் கொண்டுவரலாம் என இந்தியத் தரப்பு ஜனாதிபதி மஹிந்தரிடம் வற்புறுத்தித் தெரிவித்திருந்தது.

அந்த வற்புறுத்தலுக்கு அமைய, அரசுக்கட்சியின் தீர்வுயோசனைத்திட்டத்தை இதோ அறிவிக்கிறேன், அதோ வெளியிடு கிறேன் என இந்தியத் தரப்புக்கு ஒவ்வொரு முறையும் சமாதானம்கூறிகாலத்தைஇழுத்து வந்தார்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்தியாவினதும்சர்வதேசத்தினதும் அழுத்தம் அதிகரித்த நிலையில் சமாளிப்பு ஏற்பாடாக உருப்படியற்ற - தமிழர்களின் அபிலாஷைகளை எட்டிக்கூடப்பார்க்காத - ஒரு திட்டத்தை அவர் முன்வைத்திருக் கின்றார் எனப் புதுடில்லி கருதுகின்றது எனத் தெரிகின்றது.

தமிழர்களுக்கு நியாயமானதை விட்டுக்கொடுக்க இயலாதகொழும்பின்போக்கு விபரீதமான விளைவுகளுக்கு வழி சமைக்கக் கூடியதுஎன்பதனைக்கோடி காட்டும் விதத்தில் அமையும்வகையில்தனதுகருத்தை புதுடில்லி பெரும்பாலும் [illegible] வெளியிடும் எனத் தெரிகின்றது. (உ)

## 14 அகதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி 14 பேரும் நேற்று மன்னார் மாவட்ட நீதிவான் எஸ். பிரபாகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்புமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் எனவும் படகு கட்டணமாக தலா 4,000 செலுத்தியே இலங்கைக்கு வந்ததாகவும் மண்டப அகதி முகாமில் தொற்று நோய் மற்றும்பொருளாதாரப் பிரச்சினைகள் நிலவி வருவதாகவும் தெரிவித்தனர். (சி)

## கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்



எமது நிறுவனத்தின் முகாமையாளராகப்
பணியாற்றிவரும்
பூ.பத்மலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை

### செல்லையா பூவிலிங்கம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். அவரின் துயரில் பங்கேற்று, எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

அன்னாரின் மறைவினால் துயறுரும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளரும், ஊழியர்களும்,
கொனிக்கா கலர் லாப்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனங்களின் உரிமையாளராகிய கு.ஜெயந்தன் அவர்களின்
மாமனும் எமது நண்பன் லிங்கநாதனின் அன்புத் தந்தையுமாகிய

### செல்லையா பூவிலிங்கம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு [illegible]
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(60335)
சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ் ஊழியர்களும்
மங்களா தளபாட காட்சியறை ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவயோகம் திருஞானசுந்தரம்

வடமராட்சி, துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவயோகம் திருஞானசுந்தரம் 28.04.2007 அன்று இலண்டனில் காலமானார்.

அன்னார் அமரர்களான வடிவேலு-பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் அமரர் சுப்பிரமணியம் திருஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், செகராஜசேகரம், தெய்வகடாட்சம், திருமதி மங்கயர்க்கரசி சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி சாந்தினி பத்மநாதன் (ஆசிரியை-துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பாடசாலை), மணிவண்ணன் (B.Sc Agri.-கனடா) [illegible] மதி ஞானப்பூங்கோதை சிறீரங்கராஜ் (B.Sc Agri.-லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சோ.பத்மநாதன் (தாதிய உத்தியோகத்தர்-ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) ம.ஜெயசிறி ([illegible]), வை.சிறீரங்கராஜ் (B.Sc Agri., இலண்டன்) ஆகியோரின் மாமியும் ப.அபிராம், ம.தர்சன், ம.தனுசன், சி.கம்சத்வனி, சி.மயூரத்வனி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.05.2007) வியாழக்கிழமை இலண்டனில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சாந்திநிகேதன்'
மாலி ஒழுங்கை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
தொ.பே: 0212263315
தகவல்:
திருமதி சாந்தினி பத்மநாதன்.
(சி/52334)

### திருமதி பிரான்சிஸ் திரேஸ்மலர் (பொன்ரத்தினம்)



யாழ்ப்பாணம், பாஷையூரைச் சேர்ந்த திருமதி பிரான்சிஸ் திரேஸ்மலர் (பொன்ரத்தினம்) 01.05.2007 செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்-ராசமணி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்- தங்கராசம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பிரான்சிஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் பிலோமினம்மா, மரியம்மா, இம்மனுவேல், சேயோன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குணசிங்கம், அந்தோனியப்பு மற்றும் ஞானரெத்தினம் ஆகியோரின் மைத்துனியும் மெண்டிஸ், குயின்ரஸ், ராஜினி, கலாஜினி, பிளேசியஸ், டெனிசியஸ், றொஜின், டொறின் ஆகியோரின் பாசமிகு தாயும் ரதி, குமாரி, பெர்ணாண்டோ, குகதாஸ், உதயராணி, அமுதா, நோமன் ஆகியோரின் மாமியும் யூட், மௌண்சிங், மருன்சிங்,ஸ்ரெபான், ஸ்ரெலானி, சபீனா, நிக்கிலான், டென்சிங், டெல்றொஷான் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2007) வியாழக்கிழமை நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

48/4, செபஸ்ரியன் வீதி,பாஷையூர்.
தொ.பே: 031-2233512
(60237)
தகவல்:
அ.கொன்சாளஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.